https://puthusudar.lk/

puthusudar / புதுசுடர்

# புது சுடர்

உண்மைக்கே முதலிடம்

02nd JUNE 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 82



# பறக்க முடியாத நிலையில்

## 45 வீதமான விமானங்கள்

விமானப்படைக்குச் சொந்தமான விமானங்களில் 45 வீதமானவை பறக்க முடியாத நிலையில்,அதாவது பாவிக்க முடியாத நிலையில், உள்ளன என்று பாதுகாப்புத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொரோனா காலத்திலும் அதன் பின்னரான காலத்திலும்

02 ➤



## ஜனாதிபதி வேட்பாளர் யார்?

## ரணிலின் தீர்மானத்தின் பின்பே மொட்டின் தீர்மானம்

மொட்டு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யாரென்று ரணில் விக்ரமசிங்கவின் அறிவிப்பின் பின்பே மொட்டு அறிவிக்கும் என்று மஹிந்த ராஜபக்ச கூறியுள்ளார்.

அதற்கு முன் மொட்டின் வேட்பாளர் யாரென்று அறிவிக்கப்படுவார் என்ற கூற்றில் எந்தவித உண்மையும் இல்லை என்றும் அவர் சொன்னார்.

இந்த மாதம் 17ஆம் திகதி மொட்டின் வேட்பாளர் அறிவிக்கப் படுவார் என்று செய்தியை மறுத்தே மஹிந்த இதைக் கூறியுள்ளார்.

## ஜனாதிபதியின் நிலைப்பாடு என்ன?

ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை இரண்டு வருடங்களுக்கு ஒத்திப்போட வேண்டும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் பொது செயலாளர் பாலித ரங்கேபண்டா கூறியமை தொடர்பில் ஜனாதிபதியின் நிலைப்பாட்டை நாட்டுக்குத் தெரிவிக்க

02 ➤

## ஐக்கிய தேசிய கட்சியின் நிலைப்பாடு?

ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை இரண்டு வருடங்களுக்கு ஒத்திப்போட வேண்டும் என்ற நிலைப்பாடானது ஐக்கிய தேசிய கட்சியின் நிலைப்பாடே தவிர ஜனாதிபதியின் நிலைப்பாடு அல்ல என்று ஐக்கிய தேசிய கட்சியின் பொது செயலாளர் பாலித்த ரங்கேபண்டார கூறியுள்ளார்.

இருந்தும்,ஐக்கிய தேசிய கட்சி இந்த நிலைப்பாட்டை எடுத்தமைக்கான

02 ➤



புதுசுடர்
www.puthusudar.lk
2024 JUNE 02 - SUNDAY

# தோல்வி பயத்தில் ஜனாதிபதி

இலங்கையின் அரசியல் அரங்கில் இன்று அனைத்து அரசியல் கட்சிகளும் பிஸியாகிவிட்டன. அதற்குக் காரணம் இந்த வருடம் இடம்பெறவிருக்கின்ற ஜனாதிபதி தேர்தல்.

கட்சி தாவல்-கூட்டணி அமைத்தல்-ரகசிய சந்திப்பு என்று பரபரப்பாகிவிட்டன அரசியல் அரங்கு.

இந்தத் தேர்தலை அதிக ஆர்வத்துடன் எதிர்பார்த்திருப்பது எதிர்கட்சிகள்தான். அவர்களுக்குத்தான் வாசி அதிகம்.இப்போதே தேர்தல் பிரச்சாரங்களுக்கு இணையான பொதுக் கூட்டங்கள் நாடு பூராகவும் சூடு கிளப்பத் தொடங்கிவிட்டன.

அரச தரப்பு மண் கவ்வும் நிலைதான். இருந்தாலும்,ஆட்சியை வீட்டுக் கொடுப்பதற்கு அவர்கள் தயாரில்லை.இதனால் எதையாவது செய்து ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறது ஜனாதிபதி தரப்பு.

இதனால் இரண்டு வருடங்களுக்கு நாடாளுமன்ற மற்றும் ஜனாதிபதி தேர்தல்களை ஒத்திப்போட வேண்டும் என்றொரு நிலைப்பாட்டை ஐக்கிய தேசிய கட்சி எடுத்துள்ளது.இதை அக்கட்சியின் பொது செயலாளர் அறிவித்துள்ளதைத் தொடர்ந்து அரசியல் தளம் சூடாகத் தொடங்கியுள்ளது.

இந்தத் தீர்மானத்துக்கு எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.மொட்டு கட்சி கூட இதை விரும்பவில்லை.அவர்களும் தேர்தல்கள் உரிய நேரத்தில் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளனர்.

அரசின் தேர்தல் தோல்வியைத் தடுப்பதற்காக ஜனதிபதிக்கு முதலில் முன்வைக்கப்பட்ட யோசனை நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்த வேண்டும் என்பதுதான்.

அந்த யோசனையை முன்வைத்தவர் பசில் ராஜபக்ச. பசில் அமெரிக்காவில் சும்மா ஓய்வில் இருக்கவில்லை.அவர் அங்கிருந்துகொண்டு இலங்கையின் அரசியல் தளத்தை மிகவும் உன்னிப்பாக அவதானித்தார்.

கிராமங்களில் உள்ள மொட்டு கட்சி நிர்வாகிகளின் ஊடாக களநிலவரத்தை அறிந்துகொண்டார்.மொட்டு கட்சிக்கு எந்தளவு செல்வாக்கு இருக்கிறது என்பதையும் அறிந்துகொண்டார்.

அந்தவகையில்,வெறும் 20 வீதம் அளவிலான செல்வாக்குதான் மொட்டுக்கு இருக்கிறது.இதை வைத்துக்கொண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வெல்ல முடியாது.

அதைவிட, நாடாளுமன்றத் தேர்தலை நடத்தினால் மேலே குறிப்பிட்டதுபோல் தோல்வியடைந்தாலும் எம்பிக்களை வாங்கி நாடாளுமன்ற ஆட்சியைப் பிடிக்கலாம்.

நாடாளுமன்ற ஆட்சி கையில் இருப்பதால் ஜனாதிபதி தேர்தலுக்குச் சென்றால் இலகுவாக வென்றுவிடலாம் என்று பசில் கருதுகிறார்.

இதற்கான வேலைத் திட்டத்தை தொடக்கி வைப்பதற்காகவே பசில் அமெரிக்காவில் இருந்து இலங்கை வந்தார்.அவர் நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்துவதற்கு ஆதரவாகப் பேசி வருவதைக் காணலாம்.

அந்தத் தேர்தலும் ஜனாதிபதிக்குத் தோல்வியையே கொடுக்கும் எனக் கருதும் ஜனாதிபதி எந்தத் தேர்தலையும் நடத்தாது இரண்டு வருடங்களுக்கு ஒத்திப்போடுவது நல்லது என்று நினைக்கிறார்.

இந்த நிலைப்பாட்டுடன் ஜனாதிபதியைத் தொடர்புபடுத்தாமல் ஐக்கிய தேசிய கட்சியின் தீர்மானமாக வெளிவந்துள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராக ஜனாதிபதி இருக்கும்போது அவருக்குத் தெரியாமல் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்பதை எவருமே நம்பமாட்டார்கள்.இதற்கு யாருமே ஆதரவு இல்லை.மொட்டு கட்சிகூட இதை எதிர்க்கிறது.

எந்தத் தேர்தலை நடத்தினாலும் தமக்குத் தோல்விதான் என்று ஜனாதிபதி தரப்பு கருவதால்தான் தேர்தல்களை இரண்டு வருடங்களுக்கு ஒத்திப்போடுவதற்கு இவர்கள் முயற்சி செய்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

ஆகவே,தேர்தலை ஒத்திப்போட முடியாது.உரிய நேரத்தில் நடத்தியே ஆக வேண்டும்.

முதலில் வருவது நாடாளுமன்றத் தேர்தலோ, ஜனாதிபதி தேர்தலோ எந்தத் தேர்தலாக இருந்தாலும் இந்த அரசை விரட்டுவது என்பதில் மக்கள் உறுதியாகவே உள்ளார்கள்.

மீண்டும் ஒரு தடவை மக்கள் ஏமாறுவதற்குத் தயாரில்லை. வீழ்ந்த நாட்டைத் தூக்கி நிமிர்த்தாது அதன்மேல் ஏறி நின்றுதான் மக்களிடம் வாக்குக் கேட்டுச் சொல்லப் போகிறார்கள்.

இவர்களால் ஏற்படுத்தப்பட்ட மக்களின் பிரச்சினைகளை இவர்கள் இன்னும் தீர்க்கவில்லை. ஆனால்,பிரச்சினை தீர்ந்துவிட்டதாக இவர்கள் கூறுகிறார்கள்.

இந்தப் பொய்யெல்லாம் இனியும் எடுபடாது.மக்கள் இவர்களை விரட்டுவது என்ற தீர்மானத்தை கோத்தா விரட்டப்பட்ட சந்தர்ப்பத்திலேயே எடுத்துவிட்டார்கள்.

## பறக்க...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

இந்த விமானங்களை பராமரிப்பதற்கான நிதியை ஒதுக்க முடியாமல் இருந்ததே இதற்கு காரணம் என்று சொல்லப்படுகிறது.

இந்த பிரச்சினைக்குத் தீர்வாக அமெரிக்க அரசும் அவுஸ்திரேலிய அரசும் இரண்டு விமானங்களை இலங்கைக்கு இலவசமாக வழங்குவதற்கு முடிவெடுத்துள்ளன என்று மேலும் அறிய முடிகிறது.

## ஜனாதிபதியின்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

வேண்டும் என்று மொட்டு கட்சியின் பொது செயலாளர் சாகர காரியவசம் கூறியுள்ளார்.

தேர்தல்கள் ஒத்திப்போடப்படுவதை அனுமதிக்க முடியாது என்றும் உரிய நேரத்தில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் மொட்டு கட்சி உள்ளது என்றும் சாகர மேலும் கூறினார்.

இந்த நிலையில்,தேர்தல்கள் இரண்டும் இரண்டு வருடங்களுக்கு ஒத்திப்போடப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளமை பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்று தெரிவித்த சாகர, இது தொடர்பில் ஜனாதிபதியின் நிலைப்பாட்டை உடனடியாக நாட்டுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்று சொன்னார்.

## இது...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

காரணத்தை அவர் நாளை நாட்டுக்கு அறிவிக்கவுள்ளார்.

கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நாளை ஊடகவியலாளர்களை சந்தித்து இது தொடர்பில் அவர் விளக்கம் கொடுக்கவுள்ளார்.









# ஈரானின் எழுச்சியை பாதிக்குமா ரைசின் மரணம்?

காஸாவை–அந்த மக்களை இஸ்ரேல் அழித்துக்கொண்டிருக்கும் தருணம் இது.அந்த அழிவை முஸ்லிம் நாடுகள் கைகட்டிப் பார்த்துக்கொண்டிருக்கும் தருணம் இது.

அந்த அழிவில் இருந்து காஸ ாவையும் காசா மக்களையும் பாதுகாப்பதற்காக ஹமாஸ ிற்கு எல்லா உதவிகளையும் வழங்கி வருவது ஈரான்தான். அதிலும் ஈரானின் மறைந்த தலைவர் இப்ராஹீம் ரைஸ் மிகவும் துணிச்சலாக எல்லா உதவிகளையும் வழங்கி வந்தார்.

இந்த நிலையில்தான் ரைசின் மரணம் நிகழ்ந்துள்ளது.

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசின் மரணத்துக்கு பின் ஈரானின் எதிர்காலம் என்னவாக இருக்கப்போகிறது்இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா தொடர்பிலான நிலைப்பாட்டில் மாற்றம் வருமா்சீனா மற்றும் ரஷ்யா உடனான உறவில் விரிசல் விழுமா் ஹமாஸ் அமைப்புக்கான உதவியில் சிக்கல் வருமா என்ற கேள்வியெல்லாம் இப்போது எழத் தொடங்கியுள்ளன.

ரைசியின் மரணம் அமேரிக்கா,இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகளுக்கு மகிழ்ச்சியான விடயம் என்பதிலும் ஹமாஸ் இயக்கத்துக்கு கவலையான விடயம் என்பதிலும் மாற்றுக் கருத்துக் கிடையாது.

ரைஸ் ஈரானின் ஏனைய ஜனாதிபதிபோல் அல்லாது சற்று வித்தியாசமானவர்.சற்று இருக்கமானவர்.நாட்டுக்குள் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் ,கிளர்ச்சிகள் எழாதவாறு கட்டுப்பாட்டில் வைத்திருந்தவர்.

ஹிஜாபுக்கு எதிராக சிலர் அங்கு போராட்டம் நாடாத்தியபோது அதை முறியடித்தவர்.இதனால்தான் அவரது மரணத்தை சிலர் கொண்டாடவும் செய்தனர்.இரு ந்தாலும்,பெரும்பான்மையான மக்களின் அன்பை வென்றவர்.

பொதுவாக,உலக முஸ்லிம்கள் ஷீஆ ,சுன்னி என்று இரண்டு பிரிவாகவே உள்ளனர். ஆனால்,ரைசின் அண்மைக்கால செயற்பாடு அந்தப் பிளவை மறந்து அணைத்து முஸ்லிம்களும் ஒன்றிணைந்து நிற்கும் சந்தர்ப்பத்தை உருவாக்கியது.

இஸ்ரேல்–ஹமாஸ் போரின்போது ஹமாஸ/க்கும் காஸாவுக்கும் அல்–அக்ஸா பள்ளிவாசலுக்கும் ஆதரவாக அவர் செயற்பட்டமையே இதற்குக் காரணம்.

ஹமாஸ் இயங்குவதே ஈரானின் முழு ஆதரவோடுதான். ஏனைய முஸ்லிம் நாடுகள் பார்த்துக்கொண்டிருக்க ஈரான் மாத்திரம் இவ்வாறு துணிந்து பலஸ்தீனத்துக்கு–அதைப் பாதுகாக்கத் துடிக்கின்ற ஹமாஸ"க்கு ஆதரவு வழங்கி வருகின்றமையானது உலக முஸ்லிம்கள் அனைவரையும் நெகிழச் செய்துள்ளது.ஈரான் மீது ஒரு பற்றை–பாசத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலைமை உருவாதற்கு காரணம் ரைஸ்தான்.ஹமாஸ்–இஸ்ரேலுக்கிடையில் இந்தத் தடவை இடம்பெற்ற போரின்போது யெமனின் ஹவ்தி கிளர்ச்சியாளர்கள்கூட ஹமாஸ"க்கு ஆதரவாக களமிறங்கினர்.மறுபுறம் லெபனானின் ஹிஸ்புல்லா.

இவ்வாறு மும்முனை தாக்குதல் இஸ்ரேல்மீது தொடுப்பதற்கு காரணம் ரைஸ்தான்.இந்தத் தாக்குதலில் இஸ்ரேல் அதிக சேதத்தை எதிர்கொண்டது. இஸ்ரேலிய மக்கள் நாட்டை விட்டே ஓடும் நிலை ஏற்பட்டது.இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு எதிராக இஸ்ரேலுக்குள்ளே எதிர்ப்பு கிளம்பியது.மக்கள் வீதிக்கு இறங்கிப் போராடினர்.

அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் பெரும் தலையிடியாக இருந்தவர் ரைஸ்.அப்படிப்பட்டவர் உயிரிழந்தமையால்தான் இது இஸ்ரேல்–அமெரிக்காவின் சதியாக இருக்குமோ என்ற சந்தேகத்தை எழுப்புகிறது.

இதேவேளை,உள்நாட்டிலும் சிலர் அவரை எதிர்த்து வந்ததால் அவர்களின் சதியாகவும் இது இருக்கலாமோ என்ற சாந்தேகமும் எழுகிறது.

எது எப்படியோ,ரைஸ் மரணித்துவிட்டார் என்பதற்க்காக இஸ்ரேல்–அமெரிக்கா தொடர்பான ஈரானின் கொள்கையில் மாற்றம் வரப்போவதில்லை என்பது நிச்சயம்.

ஈரான் ஹமாஸ் அமைப்பை கைவிடப் போவதுமில்லை பலஸ்தீன் போராட்டத்தை நிறுத்தப் போவதுமில்லை என்பதை உறுதியாகக் கூறலாம்.

ஆகவே,ரைசின் மரணம் என்பது பெரும் இழப்புதான். ஆனால், அது ஈரானின் நிலைப்பாட்டிற்கு – அதன் வளர்ச்சிக்கு எந்தவகையிலும் தடையாக இருக்கப்போவதில்லை என்பது மட்டும் நிச்சயம்.

அதேவேளை, பலஸ்தீனத்துக்கான ஈரானின் உதவிகள் தடையின்றித் தொடர வேண்டும் என்பதே உலக முஸ்லிம்களின் கோரிக்கை. அதை ஈரான் நிறைவேற்றியே ஆகவேண்டும். முஸ்லிம் நாடுகள் எல்லாம் மௌனித்துப் போயிருக்கும் நிலையில்,ஈரான் மட்டுமே காஸாவுக்கு ஆதரவு என்பதில் மாற்றுக்கருத்துக் கிடையாது.





# அரசிடமிருந்து விமலுக்கு அழைப்பு

**இந்த ஆட்சியாளர்கள் நாட்டை பொருளாதார ரீதியில் சீரழித்து விட்டார்கள் என்பதற்காக இதைவிடவும் மோசமான ஜேவிபியிடம் மக்கள் செல்லலாமா?**



கேள்வி : சர்வஜன பலய என்ற பெயரில் கூட்டணி ஒன்றை உருவாக்கியுள்ளீர்கள். அது ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்தா ?

கேள்வி : கோத்தாபாயவை ஜனாதிபதியாக்குவதற்காக நீங்கள் எடுத்த பிழையான தீர்மானத்தில் எத்தனை வீதத்தை பொறுப்பேற்கப் போகிறீர்கள்?

இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கினார் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச.அவரது முழுமையான பேட்டி கீழே தரப்பட்டுள்ளது.

**கேள்வி: கோத்தா விடயத்தில் நீங்கள் தோல்வியடைந்துவிட்டீர்கள். திரும்பவும் ஒரு ஜனாதிபதி வேட்பாளரை நீங்கள் நிறுத்தினால் மக்கள் ஏற்றுக்கொள்வார்களா ?**

**கேள்வி: குருநாகல் வைத்தியசாலை வைத்தியர் ஷாபி சிஹாப்தீன் தொடர்பில் அன்று நீங்கள் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் இப்போது பொய்யாகியுள்ளதே .அரசியல் தேவைக்காகவா இப்படி செய்தீர்கள் ?**

**கேள்வி: இந்தியாவுடனான எட்கா ஒப்பந்தத்தை நீங்கள் எதிர்ப்பது ஏன்?**

**கேள்வி: சர்வஜன பலய என்ற பெயரில் கூட்டணி ஒன்றை உருவாக்கியுள்ளீர்கள். அது ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்தா?**

பதில்: இல்லை.நாம் இப்போது மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளோம்.இது மேலும் அதிகமாவதைத் தடுப்பதற்காக இவ்வாறான அரசியல் ஒன்றிணைவு தேவைப்படுகிறது. அப்படியான ஓர் ஏற்பாடுதான் இது.

**கேள்வி: கோத்தாபாயவை ஜனாதிபதியாக்குவதற்காக நீங்கள் எடுத்த பிழையான தீர்மானத்தில் எத்தனை வீதத்தை பொறுப்பேற்கப் போகிறீர்கள்?**

பதில்: பொறுப்பேற்றல் என்பதைவிட பிழைகள் சரி செய்யப்பட வேண்டும் என்பதே எனது இலக்கு.கோத்தாபய விடயத்தில் அவர் தோல்வியடைந்தமைக்கு பல காரணங்கள் உண்டு.

அவர் ராஜபக்ச குடும்பத்தின் முழுக் கட்டுப்பாட்டில் இருந்தார்.பசில் நினைத்தபடி ஆடினார்.பசில், பி.பி .ஜயசுந்தரவை ஜனாதிபதி செயலாளராக நியமித்தார்.

இவ்வாறான பல விடயங்களெல்லாம் சேர்ந்துதான் கோத்தாவின் ஆட்சியை தோல்வியாக மாற்றியது.

இந்தப் பிழைகளை நாம் சுட்டிக்காட்டியதால்தான் கோத்தாவால் அமைச்சுப் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டோம்.

இப்போதுகூட பசிலின் பிழைகளை கோத்தா சுட்டிக்காட்டமாட்டார்.அவர்கள் சகோதர பிணைப்பில் இருந்து விடுபடமாட்டார்கள்.அதனால் பசில் செய்த பிழைகளை ஏற்றுக்கொள்ளமாட்டார்.

மாறாக,பிழைகளை சுட்டிக்காட்டிய எங்களையே பிழை பிடிக்கிறார்.பசிலுக்கும் எனக்கும் இடையில் இருந்த தனிப்பட்ட பகை காரணமாகவே நான் அரசை எதிர்த்தேன் என்று கோத்தா அவரது புத்தகத்தில் எழுதியுள்ளார்.

பசிலுக்கும் எனக்கும் இடையில் எப்போதுமே தனிப்பட்ட சண்டை இருந்தது கிடையாது.அரசியல் சண்டைதான் இருந்தது.



**கேள்வி : கோத்தா விடயத்தில் நீங்கள் தோல்வியடைந்துவிட்டீர்கள். திரும்பவும் ஒரு ஜனாதிபதி வேட்பாளரை நீங்கள் நிறுத்தினால் மக்கள் ஏற்றுக்கொள்வார்களா ?**

பதில் : அதுதொடர்பில் மக்கள்தான் முடிவெடுக்க வேண்டும்.அதற்காக எமது கடமையை கைவிட முடியாது.நாம் மக்களை ஏமாற்றவில்லை.நாம் கொண்டு வந்த ஜனாதிபதியின் பிழைகளை திருத்துவதற்கு முயற்சி எடுத்தோம்.

அதை அவர் ஏற்கவில்லை.அதனால்தான் நாம் அரசில் இருந்து விரட்டப்பட்டோம்.இந்த உண்மை நாட்டுக்கே தெரியும்.

இதற்கு முன் பிழையான தீர்மானங்கள் எடுத்திருந்தால்-அதற்காக தள்ளப்பட்டிருந்தால் இப்போது அதை நிவர்த்தி செய்துகொண்டு சரியான தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

அதற்காகவே நாம் சர்வஜன பலய முன்னணியைத் தொடங்கியுள்ளோம். அதனூடாக நாம் எமது தேசியவாத செயற்பாட்டை முன்னெடுப்போம்.

**கேள்வி குருநாகல் வைத்தியசாலை வைத்தியர் ஷாபி சிஹாப்தீன் தொடர்பில் அன்று நீங்கள் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் இப்போது பொய்யாகியுள்ளேதே. அரசியல் தேவைக்காகவா இப்படி செய்தீர்கள் ?**

பதில் : நாம் அவர்மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தவில்லை. வைத்தியசாலையின் வைத்தியர்கள் சிலரும் பெற்றோர்களும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

நாம் அப்போது இதை அறிந்து வைத்தியசாலைக்கு சென்று மக்களை சந்தித்து அவர்கள் சொன்ன விடயத்தை வெளியில் சொன்னோம்.இது தொடர்பில் உண்மை நிலையை அறிவதற்காக முறையான-நடுநிலையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றோம்.

அவ்வளவுதான்.இதற்கு அப்பால் நாம் எதையும் செய்யவில்லை.இருந்தாலும்,ஷாபி குற்றவாளி இல்லை என்று இன்னும் நிரூபிக்கப்படவில்லை.அவருக்கு எதிரான விசாரணை இன்னும் முடியவில்லை.

**கேள்வி : இந்தியாவுடனான எட்கா ஒப்பந்தத்தை நீங்கள் எதிர்ப்பது ஏன்?**

பதில் : அது பாரதூரமான-இலங்கைக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய ஒப்பந்தம்.அதனூடாக இந்தியர்கள் இலங்கையை ஆக்கிரமிப்பார்கள்.இலங்கை இந்தியாவின் இன்னொரு மாநிலம்போல் மாறும்.

இந்தியர்கள் மிகவும் இலகுவாக இலங்கையில் தொழில் செய்ய முடியும்.இதனால் எமது நாட்டவர்கள் தொழிலை இழப்பார்கள்.

அந்த ஒப்பந்தத்தை அரசு வெளியில் காட்டாமல் மறைத்து வைத்துள்ளது.

**கேள்வி : சர்வதேச நாணய நிதியத்தின் உதவி தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன?**

பதில் : இந்த உதவியின் ஊடாக பொருளாதாரத்தை முன்னேற்ற முடியாது.இந்த உதவிக்காக உள்ளூர் உற்பத்திகள்மீது வரிகள் அதிகரிக்கப்பட்டன.இதனால் விலைவாசி அதிகரித்தது.ஆகவே,சர்வதேச நாணயத்தின் ஊடாக பொருளாதாரம் வளர்ச்சியடையாது.

**கேள்வி : ஜேவிபியின் பின்னால் அதிக மக்கள் ஒன்றிணைந்துள்ளனர் என்று சொல்லப்படுகிறதே ?**

பதில் : இந்த ஆட்சியாளர்கள் நாட்டை பொருளாதாரரீதியில் சீரழித்துவிட்டார்கள் என்பதற்காக இதைவிடவும் மோசமான ஜேவிபியிடம் மக்கள் செல்லலாமா?

**கேள்வி : உங்களுக்கு அரச தரப்பில் இருந்து அழைப்பு வருகிறதா??**

பதில் : ஆம் வருகிறது.நல்ல அமைச்சுக்கள் தருவதாக கூறுகிறார்கள். அதேபோல்,ஏனைய கட்சிகளில் இருந்தும் அழைப்புகள் வருகின்றன.ஆட்சியைப் பிடித்தால் பலமான அமைச்சுக்கள் தருவதாகக் கூறுகிறார்கள். ஆனால், நாம் இதற்கெல்லாம் ஆசைப்பட்டு எமது கொள்கையை விட்டுக்கொடுக்கமாட்டோம் – என்றார்.

# AyurEx Colombo 2024 விற்கு யூனிலீவர் அனுசரணை







நாட்டின் முன்னணியில் உள்ள ஆயுர்வேத வர்த்தக நாமங்களில் ஒன்றான டுநளநச யுலரளா (லீவர் ஆயுஷ்), யுyurEx Colombo 2024 இல் நடைபெற்ற சர்வதேச ஆராய்ச்சி கருத்தரங்கின் பிரதான அனுசரணையாளராக செயற்பட்டது.

2023ஆம் ஆண்டில் உருவான வெற்றிகரமான கூட்டாண்மையை தொடர்ந்தும் கட்டியெழுப்பும் வகையில் மீண்டும் அது இவ்வாறு அனுசரணை வழங்கியுள்ளது. இந்நிகழ்வு பாரம்பரிய மருத்துவ முறைகளை கொண்டாடுவதற்கும் முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கும் ஒரு முதன்மையான தளமாக அமைந்தது.

யூனிலீவர் ஸ்ரீ லங்காவின் அழகு மற்றும் சுகவாழ்வு, தனிநபர் பராமரிப்புக்கான சந்தைப்படுத்தல் பணிப்பாளர் ஷாமர சில்வா இது பற்றி தெரிவிக்கையில், ”லீவர் ஆயுஷ் ஆகிய நாம், ஆயுர்வேதத்தின் ஞானத்தை நிலைநாட்டுவதற்கும் புத்தாக்கத்தை ஏற்படுத்துவதற்கும் எம்மை அர்ப்பணித்துள்ளோம்.

AyurEx Colombo 2024 நிகழ்வுடன் இணைந்த சர்வதேச ஆராய்ச்சி கருத்தரங்கிற்கான எமது கூட்டாண்மையானது இந்த அர்ப்பணிப்பை மேலும் பிரதிபலிக்கிறது. இந்த மதிப்புமிக்க நிகழ்வானது, ஆயுர்வேதத்தை உலக அரங்கிற்கு கொண்டு செல்வதன் மூலம், ஒத்துழைப்புப்பையும் அறிவுப் பரிமாற்றத்தையும் ஏற்படுத்துவதை உறுதிப்படுத்துகிறது. பாரம்பரிய மருத்துவத்தில் ஆராய்ச்சி மற்றும் கல்வியை மேம்படுத்தும் தளமான AyurEx Colombo 2024 உடன் ஒரு கூட்டாளராக இருப்பதில் நாம் பெருமிதம் அடைகிறோம். இந்த ஒத்துழைப்பின் மூலம், ஆயுர்வேதத்தின் பலன்கள் அடுத்த தலைமுறையினர் அணுகக்கூடியதாகவும் அவர்களுக்கு பொருத்தமானதாகவும் இருப்பதை உறுதி செய்ய நாம் முயற்சி செய்கிறோம்.” என்றார்.

# Alumex நிறுவனத்திற்கு நெறிமுறையான வணிக சான்றிதழ்




Hayleys இன் துணை நிறுவனமும், இலங்கையில் அலுமினிய உற்பத்தியாளருமான Alumex PLC நிறுவனத்திற்கு உயர்ந்த ‘Certificate of Ethical Trading’(நெறிமுறை வர்த்தகச் சான்றிதழை), இலங்கையின் தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளனம் (NCE) அண்மையில் வழங்கியிருந்தது.

வணிகம், தொழிலாளர், நெறிமுறை நடத்தை, சூழல், சமூகம் தொடர்பான சிறந்த நடைமுறைகள் மூலம் மாற்றமடைந்துவரும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் மற்றும் நுகர்வோர் தெரிவுகளுக்கு இணங்குவதற்கான நிறுவனம் கொண்டுள்ள அர்ப்பணிப்பை, இந்த பெறுமதி வாய்ந்த சான்றிதழ் அங்கீகரிக்கிறது

தொழிலாளர்களை நியாயமான முறையில் நடத்துதல், பாதுகாப்பான பணிச் சூழல், சுற்றுச்சூழலை மதித்தல், உள்ளூர் சமூகங்களுடனான ஈடுபாடு ஆகியவற்றின் அடிப்படையில் NCE ஆனது விருது பெறத் தகுதியானோரை தெரிவு செய்கிறது.

இச்சான்றிதழின் மூலம், ஏற்றுமதித் துறையில் நெறிமுறையான நடைமுறைகளை மேம்படுத்துவதை NCE நோக்கமாகக் கொண்டுள்ளதுடன், நிலைபேறான மற்றும் பொறுப்பான வணிக நடைமுறைகளை பின்பற்ற நிறுவனங்களை ஊக்குவிக்கிறது.

இந்த சான்றிதழானது நிறுவனங்களுக்கு நன்மைகளை வழங்குவது மட்டுமன்றி, உலகளாவிய சந்தையில் ஒரு பொறுப்பான வர்த்தகப் பங்காளி எனும் இலங்கையின் நற்பெயரையும் மேம்படுத்துகிறது.

# DIMOவின் பலகொல்ல கிளை திறப்பு





இலங்கையில் முன்னணியில் உள்ள பல்வகைத் துறை குழுமமான DIMO, மத்திய மாகாணத்தில் உள்ள நுகர்வோரின் பல்வேறுபட்ட தேவைகளை பூர்த்தி செய்வதற்காக தனது பலகொல்ல சேவை மையத்தை இல. 688, பலகொல்ல, கென்கல்ல எனும் முகவரியில் அண்மையில் திறந்து வைத்துள்ளது.

இதற்கு முன்னதாக, பலகொல்ல சேவை மையமானது TATA வாகனங்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளுக்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில், தற்போது இந்த புதிய கிளையானது, போக்குவரத்து மற்றும் விவசாயத் துறை தொழில்துறையினருக்கு பல்வேறு சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ளதோடு, வீட்டுப் பயன்பாட்டு உபகரணங்களுக்கான தீர்வுகளை வழங்கி, வாடிக்கையாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையிலான வலுவான பங்களிப்பை வழங்குகின்றது.

# பொருளாதார மற்றும் சூழல்ரீதியான எதிர்காலத்தில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியின் பங்கு

பாஹியங்கல ஆனந்த சாகர தேரர் தலைமையிலான தேசிய சுற்றாடல் ஒன்றியம் மற்றும் இலங்கை நிலைபேறான வலுசக்தி அதிகார சபையின் (SLSEA) தலைவர் ரஞ்சித் சேபால ஆகியோருக்கு இடையில் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பு தொடர்பான கண்ணோட்டம்...



பாஹியங்கல ஆனந்த சாகர தேரர் தலைமையிலான தேசிய சுற்றாடல் ஒன்றியமானது, “புதுப்பிக்கத்தக்க வலு சகத்தி மூலம் இலங்கையில் நிலவும் வலுசக்தி நெருக்கடியை நிவர்த்தி செய்தலும் இலங்கையின் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் பாதுகாத்தலும்” எனும் தலைப்பில், இலங்கை நிலைபேறான வலுசக்தி அதிகாரசபையின் தலைவர் ரஞ்சித் சேபாலவிற்கு அண்மையில் அறிக்கையொன்றை சமர்ப்பித்திருந்தது.

அத்துடன் இலங்கையானது, நிலைபேறான பாதையில் வேகமாகப் பயணிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் பாஹியங்கல ஆனந்த சாகர தேரர், ரஞ்சித் சேபாலவுடன் முக்கிய கலந்துரையாடலிலும் ஈடுபட்டிருந்தார்.

குறித்த அறிக்கையின் முதன்மையான கவனமும், குறித்த கலந்துரையாடலின் தலைப்பும், இலங்கையில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியின் தற்போதைய நிலை மற்றும் எதிர்கால வாய்ப்புகள் ஆகியன பற்றியதாக அமைந்திருந்தன.

# T20 உலகக் கிண்ண உத்தியோகபூர்வ ஆடைப் பங்காளராக" சிக்னேச்சர்




இலங்கையின் மிக போற்றப்படுகின்ற ஆடவர்களுக்கான ஆடை வர்த்தக நாமமாக விளங்கும் சிக்னேச்சர், ஐசிசி ஆண்களுக்கான இருபதுக்கு 20 உலகக்கிண்ண 2024 இற்கான "உத்தியோகபூர்வ முறையான ஆடைப் பங்காளராக" மீளவும் இலங்கை கிரிக்கெட்டுடன் இணைந்துள்ளது.

கடந்த காலங்களில் இவ்விரண்டு நிறுவனங்களும் கூட்டாக இணைந்து செயற்பட்டபோது நிலவிய நம்பிக்கையே இதனை எடுத்துக்காட்டுகின்றது.

இந்நிறுவனமானது இதற்கு முன்னர் 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணத்திற்கும் 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற இருபதுக்கு 20 உலகக் கிண்ணத்திற்கும் ஆடை அனுசரணையாளராக பணியாற்றியதுடன் அந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் இலங்கை அணி உலகக்கிண்ணத்தை வென்றெடுத்தது.

விளையாட்டுத்துறையில் அர்த்தமுள்ள தாக்கத்தை ஏற்படுத்தவே இந்த வர்த்தக நாமம் பாடுகின்றது. சிக்னேச்சர் வர்த்தக நாமத்தின் அர்ப்பணிப்பு ஃபேஷன் துறைக்கு அப்பாற்பட்டது.

# பெரேரா அன்ட் சன்ஸ் இன் அனுசரணையுடன் Hill Club Annual Open Ranking டென்னிஸ் நிகழ்வு



இலங்கையின் மிகப் பாரிய துரித பரிமாறல் சேவை உணவகச் சங்கிலியான பெரேரா அன்ட் சன்ஸ் பேக்கர்ஸ் (Perera & Sons Bakers - P&S), அண்மையில் இடம்பெற்ற Hill Club Annual Open Ranking டென்னிஸ் நிகழ்வுக்கு தொடர்ந்து 2வது ஆண்டாகவும் தனது அனுசரணையை வழங்கியுள்ளது.

பாடசாலை மட்டத்திலான சுற்றுப்போட்டிகள் அடங்கலாக, டென்னிஸ், பட்மின்டன், மேசைப்பந்தாட்டம் மற்றும் ஏனைய விளையாட்டு நிகழ்வுகளுக்கு நீண்டகாலமாக ஆதரவளித்து வருகின்ற P&S, உலகளாவில் பரவிய தொற்றுநோய் காரணமாக பல ஆண்டு இடைவெளியின் பின்னர் கடந்த ஆண்டில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட Hill Club Annual Open Ranking டென்னிஸ் நிகழ்வுக்கான அனுசரணையை ஆரம்பித்திருந்தது.

பிரிவு 2 (category 2) சுற்றுப்போட்டியாக அமைந்துள்ள Hill Club Annual Open Ranking டென்னிஸ் நிகழ்வு, இலங்கையின் டென்னிஸ் நாட்காட்டியில் மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்ற நிகழ்வுகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது.

இதன் காரணமாக, 17 வகையான நிகழ்வுகளில் 700 க்கும் மேற்பட்டோர் மிகுந்த உற்சாகத்துடன் பங்குபற்றியதை காணக்கூடியதாக இருந்தது.

முதல்முறையாக இந்தளவுக்கு பெருமளவான விண்ணப்பங்கள் நிகழ்வுக்கு கிடைக்கப்பெற்றிருந்ததுடன், இந்நிகழ்வு பிரபலமடைந்து வருவதையும் இது எடுத்துக்காட்டுகின்றது. இந்த ஆண்டு நிகழ்வுக்கு பெரும் எண்ணிக்கையான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருந்த நிலையில் தகுதிகாண் சுற்றுக்களம் மற்றும் முதலாவது சுற்றுக்கள் கொழும்பில் இடம்பெற்றதுடன், முக்கியமான ஆட்டங்கள் 2024 ஏப்ரலில் நுவரெலியாவிலுள்ள அழகிய Hill Club Courts திடலில் இடம்பெற்றன.

# இலங்கை சுற்றுலாத்துறைக்கு ஏற்ற வாகனம் அறிமுகம்

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் (SLTDA) கீழ் பயணிகள் போக்குவரத்து வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு இலங்கை அமைச்சரவையின் அண்மைய தீர்மானமானது, சுற்றுலாத் துறை தொடர்பான முக்கியமான முன்னேற்றமாக அடையாளம் காணப்படுகிறது.

அந்த வகையில், Associated Motorways (Private) Limited நிறுவனமானது, 2024 NISSAN Urvan NV350 எனும் 16 ஆசனங்களைக் கொண்ட, அகலமான இட வசதியைக் கொண்ட, High roof Micro bus வாகனத்தை இறக்குமதி செய்து வழங்குகிறது.




குறிப்பாக 16 - 30 ஆசனங்களைக் கொண்ட இது mini-coach வகையைச் சேர்ந்ததாகும். 2024 Nissan Urvan NV350 ஆனது, இலங்கைக்கான சிறந்த தெரிவாகவும், இலங்கை சுற்றுலாவிற்கு ஏற்ற தெரிவாகவும் அடையாளம் காணப்படுகின்றது.

இந்த வாகனமானது, ஆசனங்களின் திறன் மற்றும் தரநிலைகள், அரசாங்கத்தின் அனுமதிப்பத்திரத்திற்கு அவசியமான அம்சங்களை பூர்த்தி செய்வதோடு, Nissan Motor Corp நிறுவனம் வழங்கும் உற்பத்தி நிறுவனத்தின் உத்தரவாதத்தையும் கொண்டுள்ளது. 2024 Nissan Urvan NV350 வாகனம், கால்களை வைக்க போதுமான வசதியையும், தலைக்கும் கூரைக்கும் இடையிலான இடவசதியையும் கொண்டுள்ளதன் மூலம், ஒவ்வொரு பயணத்தையும் பயணிகளுக்கு வசதியானதாக ஆக்குகின்றது.

# தரவு மற்றும் மேம்பட்ட பகுப்பாய்வுகளில் சிறந்து விளங்குவதற்கான மூலோபாய கூட்டாண்மை

ஜோன் கீல்ஸ் குழுமத்தின் தரவு மற்றும் மேம்பட்ட பகுப்பாய்வு சிறப்பு மையமான ஒக்டேவ், இலங்கையில் உள்ள பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் தனது சமீபத்திய மூலோபாய கூட்டாண்மையை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது.

நாட்டின் மிகப் பழமையான பல்கலைக்கழகம் என்ற சிறப்பைப் பெற்ற பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அறிவியல் பீடத்துடன் இந்த கூட்டுமுயற்சி உயர்மட்ட கல்வி நிறுவனங்களுடன், குறிப்பாக கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறையில் வலுவான உறவுகளை உருவாக்குவதற்கான தொடர்ச்சியான முயற்சிகளில் குறிப்பிடத்தக்க படியாகும்.

இந்த கூட்டாண்மையின் ஒரு பகுதியாக, ஒக்டேவ், தரவுப் பகுப்பாய்வு தொடர்பான பாடத்திட்டத்தை மேம்படுத்தவும் வலுப்படுத்தவும் பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் குறிப்பாக தரவு அறிவியல், இயந்திர கற்றல் மற்றும் தரவுப் பொறியியல் ஆகியவற்றில் கவனம் செலுத்தி நெருக்கமாகப் பணியாற்றும். தொழில்துறையின் சிறந்த நடைமுறைகள் மற்றும் வளர்ந்து வரும் போக்குகளை இணைப்பதன் மூலம், மாணவர்கள் சமீபத்திய அறிவைப் பெற்றிருப்பதை உறுதிசெய்ய இந்த கூட்டுமுயற்சி உதவும் மற்றும் ஒக்டேவ் இன் அனுபவமிக்க வல்லுநர்கள் மாணவர்களால் மேற்கொள்ளப்படும் இறுதி ஆண்டு ஒப்படைப்புகளுக்கு மேற்பார்வையாளர்களாக பணியாற்றுவார்கள் மற்றும் நுண்ணறிவு, அனுபவங்கள் மற்றும் அறிவைப் பகிர்ந்து கொள்ளும் விருந்தினர் விரிவுரையாளர்களாகவும் செயல்படுவார்கள்.

ஒக்டேவ் ஆனது திறமையான மற்றும் ஆர்வமுள்ள இளங்கலை பட்டதாரிகளுக்கு பல்கலைக்கழக உள்ளகப் பயிற்சிக்கான வாய்ப்புகளை வழங்கும். இந்த நடைமுறை ஈடுபாடு, அனுபவம் வாய்ந்த நிபுணர்களுடன் ஒத்துழைக்க, தரவு அறிவியல், இயந்திர கற்றல் பொறியியல், தரவு பொறியியல், வணிக அறிவாண்மை பொறியியல் மற்றும் மேம்பட்ட பகுப்பாய்வு பயன்பாட்டு நிகழ்வுகளை வழங்குதல் ஆகியவற்றில் விலைமதிப்பற்ற நடைமுறை வெளிப்பாட்டைப் பெறுவதற்கான வாய்ப்பை அவர்களுக்கு வழங்கும். அதேசமயம், ஒக்டேவ் ஆனது, தொழில் கண்காட்சிகளில் பங்கேற்பதன் மூலம் பல்கலைக்கழகத்துடன் தீவிரமாக ஈடுபடும், தரவு பகுப்பாய்வு மற்றும் அது வழங்கும் தொழில் வாய்ப்புகளின் இயக்க ஆற்றல் மிகுந்த துறையினை மாணவர்களுக்கு வழங்கும்.

# IOM ஸ்ரீ லங்கா உடன் eChannelling கைகோர்ப்பு




இலங்கையின் முன்னணி வைத்திய முற்பதிவு கட்டமைப்பும், ளுடுவு-ஆழுடீஐவுநுடு இன் துணை நிறுவனமுமான நஊாயநெைடடலைபெ, ஐக்கிய இராஜ்ஜியம், அவுஸ்திரேலியா, கனடா மற்றும் நியுசிலாந்து ஆகிய நாடுகளுக்கான புலம்பெயர்வுகளுக்கு அவசியமான சுகாதார மதிப்பாய்வுகளை மேற்கொள்வதற்கான இலவச ஒன்லைன் முற்பதிவுகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக ஐவெநசயெவழையெட முசபயதெையவழைெ கழச ஆபைசயவழைெ (ஐழுஆ) ஸ்ரீ லங்கா உடன் கைகோர்த்துள்ளதாக அறிவித்துள்ளது.

புலம்பெயர்வோர் மற்றும் பயணங்களை மேற்கொள்வோருக்கு அவசியமான, பயனளிக்கும் பரிபூரண சுகாதார மதிப்பாய்வுகளை ஐழுஆ வழங்குகின்றது.

இந்த புதிய பங்காண்மையினூடாக, புலம்பெயர்வோருக்கு தமது ஐழுஆ சுகாதார மதிப்பாய்வு முற்பதிவுகளை ஒன்லைனில் நஊாயநெைடடலைபெ இன் இணையத்தளமான ாவவிள:ஃஃறறற. நஉாயநெைடடலைபெ.உழஅஃ ஊடாக அல்லது நஊாயநெைடடலைபெ மொபைல் யீ ஊடாக மேற்கொள்ள முடியும்.

நஊாயநெைடடலைபெ மற்றும் ஐழுஆ இடையிலான கைகோர்ப்பினூடாக, இடையீட்டாளர்களின் தலையீடின்றி புலம்பெயர்வதற்கு எதிர்பார்ப்போருக்கு தமது மருத்துவ பரிசோதனை முற்பதிவுகளை இலவசமாக முற்பதிவு செய்து கொள்ளும் வசதி வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த ஒழுங்குபடுத்தப்பட்ட செயன்முறையினூடாக புலம்பெயர்வோருக்கு தமது பிரயாணத்துக்கு முன்பாக சுகாதார பரிசோதனை சேவைகளை மேற்கொள்வதற்கான வசதிகள் வழங்கப்படுகின்றன.

# 11வது உலக நீர் மன்றத்தை சவூதி நடாத்தத் தீர்மானம்




(காலித் ரிஸ்வான்)

11 வது உலக நீர் மன்றத்தை 2027ஆம் ஆண்டில் சவூதி அரேபியா நடாத்துவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது இந்தோனேசியாவில் நடைபெற்ற உலக நீர் மன்றத்தின் 10 வது அமர்வின் நிறைவு விழாவின் போது அறிவிக்கப்பட்டது.

இதில் பங்கேற்கும் நாடுகளின் தலைவர்கள் அமைச்சர்கள் 160 நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகள் பல்வேறு சர்வதேச அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.

11வது உலக நீர் மன்றம் ”ஒரு சிறந்த எதிர்காலத்திற்கான நடவடிக்கை” என்ற கருப்பொருளின் கீழ் நடைபெறவுள்ளதோடுஇ உலகளாவிய நீர் சார்ந்த பிரச்சினைகளை அனுகுவதிலும் பிராந்திய மற்றும் சர்வதேச நீர் முன்முயற்சிகளை ஆதரிப்பதிலும் மற்றும் சவூதி அரேபியாவின் விஷன் 2030 திட்டத்துடன் இணைந்த நிலையான வளர்ச்சி இலக்குகளை நோக்கி செயல்படுவதிலும்






அந்நாட்டுத் தலைமையின் ஆர்வத்தை பிரதிபலிக்கிறது.

அந்நாட்டுச் சுற்றுச்சூழல் அமைச்சர் அப்துல் ரஹ்மான் அல்-ஃபத்லி இது பற்றி கருத்து தெரிவிக்கையில் சவூதி தலைமையின் குறிப்பிடத்தக்க ஆதரவும் வழிகாட்டல்களும் நீர் துறையில் சவூதியின் தரத்தை சர்வதேச ரீதியாக உயர்த்தியுள்ளது இது குறிப்பிடத்தக்க இந்த உலகளாவிய மன்றத்தை நடத்துவதற்கான வாய்ப்பிற்கு வழிவகுத்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

உலகளாவிய நீர் சார்ந்த சவால்களை எதிர்கொள்வதற்காக சர்வதேச ஆதரவைப் பெறவும் சர்வதேச நிறுவனங்களுடன் ஒத்துழைக்கவும் ரியாத் நகரில் உள்ள உலக நீர் அமைப்பை அந்நாட்டு பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மான் அவர்கள் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நிறுவியமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# அமானா வங்கி 2024 ஆம் ஆண்டை சிறந்த நிதிப் பெறுபேறுகளுடன் ஆரம்பித்துள்ளது





அமானா வங்கி தனது சிறந்த நிதிப் பெறுபேறுகளை தொடர்ந்தும் பதிவு செய்து, முதல் காலாண்டில் வரிக்கு முந்திய இலாபமாக ரூ. 734.5 மில்லியனை பதிவு செய்திருந்தது.

முன்னைய ஆண்டில் இதே காலப்பகுதியில் பதிவு செய்திருந்த வரிக்கு பிந்திய இலாபம் ரூ. 423.5 மில்லியனாக காணப்பட்டதுடன், இது 73மூ வருடாந்த அதிகரிப்பாகும். அதுபோன்று வரிக்கு பிந்திய இலாபம் ரூ. 422.2 மில்லியனாக காணப்பட்டதுடன், 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் இந்தப் பெறுமதி ரூ. 220.7 மில்லியனாக பதிவாகியிருந்தது. இது 91% வருடாந்த வளர்ச்சியாகும்.

வங்கியின் மொத்த வருமானம் ரூ. 4.1 பில்லியனாக பதிவாகியிருந்தது. இது முன்னைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சி என்பதுடன், இதில் இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார மீட்சி கொள்கைகளின் பிரகாரம் சந்தையில் ஏற்பட்ட வங்கி வீதங்களின் வீழ்ச்சி பங்களிப்பு செய்திருந்தது. எவ்வாறாயினும், ஆரோக்கியமான நிதியளிப்பு எல்லைப் பெறுமதியான 4.5% ஐ பேணியிருந்ததுடன், தேறிய நிதியளிப்பு வருமானம் ரூ. 1.8 பில்லியனாக முன்னேறியிருந்தது.

வங்கியின் கட்டண மற்றும் தரகு வருமானம் மற்றும் வியாபார வருமானம் வருடாந்த அடிப்படையில் முறையே 15மூ மற்றும் 11மூ அதிகரிப்பை பதிவு செய்து ரூ. 285.9 மில்லியன் மற்றும் ரூ. 275.1 மில்லியனாக பதிவாகியிருந்தன. அதனூடாக வங்கியின் மொத்த தொழிற்படு வருமானம் ரூ. 2.4 பில்லியனை எய்தியிருந்தது. 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியை பதிவு செய்திருந்த மதிப்பிறக்க கட்டண ஒதுக்கங்களைத் தொடர்ந்து, வங்கியின் தேறிய தொழிற்படு வருமானம் ரூ. 2.1 பில்லியனாக பதிவாகியிருந்தது. இது வருடாந்த அடிப்படையில் ஆரோக்கியமான 36% வளர்ச்சியை பிரதிபலித்திருந்தது.

# அலியான்ஸ் லங்காவிற்கு விருதுகள்

இலங்கையின் முதன்மையான காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றும், உலகளாவிய யுடடயைணெ ளுநு குழுமத்தின் உறுப்பு நிறுவனமுமான அலியான்ஸ் லங்கா, அண்மையில் இடம்பெற்ற புசநயவ ஆயயெபநச யுறயசனள 2023 நிகழ்வில் பல்வேறு விருதுகளையும், அங்கீகாரங்களையும் பெற்றுள்ளது.

ஒட்டுமொத்தமாக அலியான்ஸ் லங்கா அணியின் 9 அங்கத்தவர்கள் இவ்வாண்டில் விருதுகளை வென்றுள்ளதுடன், கடந்தகாலங்களில் 37 அங்கத்தவர்கள் இந்த அங்கீகாரத்தைப் பெற்றுள்ள நிலையில், அலியான்ஸ் லங்கா தொடர்ந்து 6வது ஆண்டாகவும் “ஊழஅியலெ றவைா புசநயவ ஆயயெபநசள” என்ற அங்கீகாரத்தைச் சம்பாதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

புசநயவ ஆயயெபநசள என்ற அங்கீகாரத்தைப் பெற்றுள்ள அலியான்ஸ் லங்கா நிறுவனத்தின் பணியாளர்களில் 37மூ ஆனோர் பெண்கள் என்பதை விசேடமாக குறிப்பிட வேண்டியுள்ளதுடன், பன்மைத்துவம், சமத்துவம் மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றில் நிறுவனத்தின் அர்ப்பணிப்பை இது அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.

வெற்றியாளர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்து, தனது நேர்மறை எண்ணங்களைப் பகிர்ந்துகொண்ட அலியான்ஸ் லங்கா லிமிட்டெட் நிறுவனத்தின் பிரதம விநியோக அதிகாரி ரங்க டயஸ் அவர்கள் கருத்து வெளியிடுகையில், “எமது முகாமைத்துவ அணியின் மத்தியில் தலைசிறந்த மகத்துவத்தை இவ்விருதுகள் அங்கீகரிக்கின்றன. என்று குறிப்பிட்டார்.

